8 ஆகஸ்ட்டு 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 19 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**மரியா, எதிர்நோக்குதலின் தாய்**



# வாழ்வு தரும் அப்பத்தை இயேசுவால் மட்டுமே தர முடியும்

ஆண்டவர் ஒருவரே கடவுள் என்பதை கர்மேல் மலையில் இறைவாக்கினர் எலியா நிரூபித்துக் காட்டினார். எலியா வழியாகச் செயல்பட்ட கடவுளின் மாபெரும் ஆற்றல், பாகாலின் 450 இறைவாக்கினர்களையும் தோற்கடித்தது. கடவுளின் வாக்குறுதிகளின் நம்பிக்கையில் உறுதியாக நின்ற இறைவாக்கினர் எலியா, கடவுளின் சொற்படி கேட்டு, கீழ்படிந்து நடந்தார். கர்மேல் மலையில் கடவுளின் ஆற்றலின் மகத்துவத்தைக் கண்ட மக்கள் விரைவிலே மறந்து தங்களது பழைய தீய வழிக்குச் சென்றனர்.

இதன் விளைவால், ஈசபேல் தன்னை கொன்று விடுவாளோ என்ற பயத்தில் எலியா ஓட வேண்டியதாயிற்று. இதனால் தமது உயிரை எடுத்துக் கொள்ளும்படி கடவுளை அவர் வேண்டினார். ஏன் அவர் அவ்வாறு செய்தார். ஓடி களைத்து விட்ட அவர் விரக்தி அடைந்திருப்பார். ஆயினும் இந்த சூழ்நிலையில் கடவுள் அவரைத் தேற்றினார். கடவுள் வானதூதரை அனுப்பி எலியாவிற்கு உணவும் தண்ணீரும் கொடுத்து, அடுத்தக் கட்டப் பயணத்திற்குத் தயார்ப்படுத்தினார். ஒரேபு மலைக்கான பயணத்திற்கு.

எபேசியருக்கு எழுதிய கடிதத்தில், **தூய ஆவியானவர் நம்மில் குடியிருக்கிறார் என்றும் தூய ஆவியானவருக்கு துயரம் வருவிக்காதீர்கள்** என பவுல் நமக்கு நினைவுப்படுத்துகிறார். தந்தையாகிய கடவுளின் அன்பை மற்றவர்களிடம் நாம் பிரதிபலிக்கவே நமக்குத் துணையாக தூய ஆவியானவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதனால், கடவுளின் பிள்ளைக்கேற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும். அதற்கு எதிர்மாறாக நடந்து கொள்ளக்கூடாது. “நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாக” நாம் மாறி, கடவுளுக்கும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் அன்பு ஒழுக ஏற்ற வாழ்வு வாழ வேண்டும்.

“விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே” என இயேசு கூறியது கண்டு, யூதர்கள் முனுமுனுத்ததாக இன்றைய யோவான் நற்செய்தியில் வாசிக்கிறோம். ஆனால், நமது மனதுக்கும் உடலுக்கும் ஆன்மாவுக்கும் ஊட்டமளிப்பது, “வாழ்வு தரும் இந்த அப்பமே” என நம்பி திருப்பலியில் பங்கு கொள்கிறோம். நம்பிக்கையோடு வருவோர், அழிவுறாமல் இயேசுவில் வாழ்வு பெறுவர். ஓரேபு மலைக்கான பயணத்திற்கு ஊட்டத்தையும் வலிமையையும் இறைவாக்கினர் எலியா பெற்றதும், இந்த அப்பத்திலிருந்தே. ஆனால் இறைமகன் நமக்கு வழங்கும் இந்த ஆன்மீக உணவு என்றென்றும் நமக்கு ஊட்டமளிக்கும். இயேசு மட்டுமே முடிவில்லா வாழ்வளிக்கும் அப்பத்தை வழங்க முடியும்.

இறைவாக்கினர் எலியாவிற்கு ஊட்டமளித்த அதே கடவுள் நமது வாழ்க்கைப் பயணத்திற்கும் ஊக்கமளிப்பார் என நம்பிக்கை கொள்வோம்.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

**“விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே”**

(யோவான்6:51)

**இன்றைய வாசகங்கள்:**

1அரசர்19: 4-8;
திபா. 34: 2-3, 4-5, 6-7, 8-9;
எபேசியர் 4: 30-5:2;
யோவான் 6:41-51.

INTERNAL CIRCULATION ONLY
BUL 32/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org